
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 28 இதழ் - 4 ஏப்ரல் 2015

தனிப்பிரதி
ரூ.10/-



ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !

# பதினெட்டாம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

**இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்,

ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.

திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

**நாள் : மே, 4,5, 6, - 2015 ( திங்கள், செவ்வாய், புதன் )**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. 300 /-

சிறியவர்கள் ரூ. 200 /-

உணவும், தங்குமிடமும் இலவசம்

**ஆசானின் அறிவுரையிலே....**


1. ஆசிரியர் உரை ........................3
2. ஏன் கிறிஸ்து கல்லறையிலிருந்து...........11
3. பெண்கள் பகுதி .................... 15
4. வாலிபர் பகுதி ...................... 20
5. சிறுவர் பகுதி ....................... 23
6. கிறிஸ்து என்னும் மார்க்கம் ......... 25
7. பரீட்சை ............................ 28
8. துன்மார்க்கர் வெட்கப்பட்டும்................. 31
9. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ............... 33


**முகாமின் சிறப்பம்சங்கள்**

★ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.

★ தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வருகை தரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

★ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் வல்லமையான தேவச் செய்திகள்.

★ தேவ பக்தியைத் தூண்டும் ஆவிக்குரிய பாடல்கள்.

★ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.

★ பெண்கள், வாலிபர்கள், வாலிப பெண்களுக்கென தனித்தனி வகுப்புகள்.

★ சிறு பிள்ளைகளுக்கு சிறப்பு வகுப்புகள். (போட்டியும், பரிசுகளும் உண்டு)

★ **பெண்களுக்கு தனி இடவசதி.**

★ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு கட்டணத்துடன் கூடிய தனித்தனி அறைகள்

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 28 APRIL - 2015 Issue - 4**


ஆசிரியர் உரை

# விவசாயத் தீர்க்கதரிசியின் மூலமாக...

ஒன்றான மெய் தேவனால் தமது ஆவியானவரைக் கொண்டு கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் பல தீர்க்கதரிசிகள் பற்றி நாம் படிக்க முடியும். ஆதியாகமம் தொடங்கி பலர் நமக்குத் தேவனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளனர். ஏறத்தாழ அவர்கள் அனைவரும் தேவன் சார்பாகப் பேசி, தேவனுக்காகப் பேசி தேவனுக்கு ஊழியம் செய்தவர்கள். இவர்களுள் தேவனை நேசிப்பவர்களால் அதிகமாக அறியப்பட்டவர்களும் உண்டு, அறியப்பட வேண்டிய அளவுக்கு அறியப்படாதவர்களும் உண்டு. வேதாகமத்தின் பக்கங்களில் தீர்க்கதரிசி என்ற வார்த்தையோடு முதன்முதல் நேரிடையாக சம்பந்தப்பட்டிருப்பவர் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தான். என்ன ஆச்சரியமாக உள்ளாத? ஆமா, நம்ம ஆபிரகாம் தான் (ஆதி. *20:7*) இப்படி வார்த்தையினடிப்படையில் ஆபிரகாம் சம்பந்தப்பட்டிருந்தாலும், தீர்க்கதரிசி என்னும் வார்த்தைக்கான செயலினடிப்படையில் அந்த வார்த்தைக்கு நெருக்கமானவர் தேவ மனிதனாகிய மோசேயே (உபா. *18:15-19*). முதல் தீர்க்கதரிசிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கை நாம் மறந்து விட முடியாது. (யூதா. *14,15*)

இப்படி இவர்கள் தொடங்கி பல தீர்க்கதரிசிகள் இருந்தாலும் இவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவன் எலியா தீர்க்கன். மரணத்தை

ருசிபார்க்கமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டு பேரில் இவரும் ஒருவர், மற்றொருவர் ஏனோக்கு. இன்னும், மறு ரூபமலைக் காட்சியில் இயேசுவோடு தோன்றின இரண்டு பேரிலும் இவர் ஒருவர், மற்றவர் மோசே. அவ்வரிய காட்சியில், மோசே தாசன் பழைய பிரமாணங்களின் தந்தையாகவும், எலியா தீர்க்கன் ஒட்டுமொத்த தீர்க்கதரிசிகளின் பிரதிநிதியாகவும் சித்தரிக்கப்பட்டிருப்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இவ்வளவு சிறப்புக்குரிய தீர்க்கதரிசி வேறு யாரும் இல்லை.

இந்தத் தீர்க்கதரிசியின் வழித்தோன்றலாக வந்தவர்தான் விவசாயத் தீர்க்கதரிசியான எலிசா. பெரும் நிலக்கிழாராக வாழ்ந்து வந்த நிலையில், உழுத ஏர் கையோடு தீர்க்கதரிசன வேலைக்கு அழைக்கப் பட்டு வந்தபடியால் நான் இவரை விவசாயத் தீர்க்கதரிசி என்றழைக் கிறேன் அவ்வளவே. இவருடைய தகப்பன் பேர் சாப்பாத். சாப்பாத்தின் குமாரனான இந்த எலிசா ஒரு திண்ணை தூங்கி அல்ல. 12 ஏர் பூட்டி வயலில் வேலை செய்த கடும் உழைப்பாளி. ஏரில் பூட்டின மாடுகளுக்கு இவன் ஓய்வு கொடுத்துள்ளான். ஆனால், தானோ ஓய்வு ஒழிச்சலின்றிப் பாடுபட்டுள்ளான். தேவன் தன்னுடைய வேலைக்கு எப்படிப்பட்ட ஆட்களைத் தெரிந்துகொள்கிறார் பாருங்கள்! ஆனால், இன்றைக்கு கர்த்தருடைய வேலை கையாலாகாதவர்களுக்கான ஒன்றாக மெல்ல மெல்ல மாறி வருகிறது. நான் சொல்வதில் பெரிய தவறு இருக்க வாய்ப்பில்லை என்று நம்புகிறேன்!

கர்த்தருடைய வேலையைப் பெரும் சவால்களுக்கு மத்தியில் செய்து வந்த எலியா ஒரு சமயம் ஓரேப் மலையிலிருந்து வந்து, எலிசா இருக்கும் இடம் மட்டும் போய்,அவன் மேல் தன் சால்வையைப் போட்டு அவனுக்கான அழைப்பை அறிவித்தான் (1 இராஜா 19:19). அப்பொழுது எலிசா மாடுகளை விட்டு எலியாவின் பிறகே ஓடி, நான் என் தகப்பனையும் , தாயையும் முந்தஞ் செய்ய உத்திரவு கொடும், அதற்குப் பின் உம்மைப் பின் தொடர்வேன் என்றான்(1 ராஜா 19:20). தேவ அழைப்பு இவனைத் தேடி வந்தபோது, இவன் ஏரையும், மாடு களையும் விட்டு விட்டு வந்து விட்டான் ! ஊழிய அழைப்பிற்கு எலிசா அடிபணிந்த விதம் கவனிக்கத்தக்கது.

எலியாவுடன் இணைந்து தன் வேலையைச் செவ்வனே செய்த படியால், வேதாகமம் எலிசாவை, "*எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்தவன்* " என்று செல்லமாகக் குறிப்பிடுகிறது (11 ராஜா 3:11) இஸ்ரவேலின் நான்கு ராஜாக்களாகிய யோராம், யெகூ,யோவாகாஸ், யோவாஸ் நாட்களில் சுமார் 50 ஆண்டுகள் தீர்க்கதரிசன ஊழியம் செய் திருக்கிறார். எலிசா என்னும் பெயருக்கான பொருள் தேவன் இரட்சிப்பாக இருக்கிறார் என்பது. பொருத்தமான பெயர்.

சரி, ஒன்பதாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசியான இந்த எலிசா, அரிதான காரியமாகிய ஆவியின் வரத்தை எலியாவிடமிருந்து இரட்டிப்பாய் பெற்றுக்கொண்டதாலோ என்னவோ, எலியாவைக் காட்டிலும் இரண்டு மடங்குக்கு மேலான அற்புதங்களை நடப்பிக்க தேவன் இவனைப் பயன்படுத்தினார். ஒருவேளை, பழைய ஏற்பாட்டில் மோசேயும்,ஆரோனும் இணைந்து ஒரு 23 அற்புதங்கள் வரை செய்திருந்தாலும், தனி ஒருவனாக அதிக அற்புதங்களை நடப்பித்த வர்களின் பட்டியலில் இவருக்குத் தான் முதலிடம். சொல்லப்போனால் ஒட்டுமொத்த வேதாகமத்திலும் இயேசு ஆண்டவருக்கு அடுத்த படியாக அற்புதங்களைச் செய்தவர் இவர்தான். இதுபோதாதா இந்த எலிசா யார் என்பதற்கு?

விவசாயத் தீர்க்கதரிசியாக ஊழிய வாழ்க்கையைத் தொடங்கி, ஓர் அலாதியான அற்புதத் தீர்க்கத்தரிசியாக உருவெடுத்த எலிசா, பல பக்தி இலட்சணங்களின் இருப்பிடமாகவே வாழ்க்கையை நடத்தியிருக் கிறார். ஆம், 1. தேவ அழைப்பிற்கு அடிபணிந்துள்ளார். (1 ராஜா. 19:20-21). 2. ஆவியின் வல்லமையை உணர்ந்து இரட்டிப்பாக அதை நாடியுள்ளார் (2 ராஜா 2:9). 3. பயமின்றி தேவ செய்தியை வெளிப் படுத்தியுள்ளார் (2 ராஜா 3:16,17). 4. கொடுக்கப்பட்ட வேலையை முழு ஈடுபாட்டோடு நடப்பித்துள்ளார் (2 ராஜா 4:34, 35). 5. ஆதாய நோக்கமின்றி ஆன்மீகப் பணி செய்துள்ளார் (2 ராஜா 5:16). 6. எந்தச் சூழ்நிலையிலும் தன் நம்பிக்கையில் தடுமாறாமல் இருந்துள்ளார் (2 ராஜா 6:15, 16). 7. ஆவிக்குரிய பார்வை கொண்டவராக காரியங்களை அணுகியுள்ளார் (2 ராஜா 6:17).

இந்த எலிசாவைத் தான் தேவன் பழைய ஏற்பாட்டின் "அற்புதத் தீர்க்கனாக" மாற்றினார். அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களை நாம் கவனிக்கும்போது, அவைகள் எலிசாவின் சிறப்புகளை மாத்திரம் நமக்கு எடுத்துச் சொல்லாமல், நம்முடைய பக்தி வாழ்வுக்கான பல பாடங் களையும் கற்றுத் தருகிறதாக உள்ளது. அப்பாடங்களுக்குள் செல்லும் முன், அந்த அற்புதங்களின் பட்டியலைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம். 1. யோர்தானின் தண்ணீரைப் பிளத்தல் (2 ராஜா 2:14), 2. எரிகோவின் தண்ணீரை ஆரோக்கியமாக்குதல் (2 ராஜா 2:19-22), 3. பெத்தேலின் பிள்ளைகளைச் சபித்தல் (2 ராஜா 2:23-25), 4. விதவையின் எண்ணெயை விருத்தியாக்குதல் (2 ராஜா 4:8-17), 5.சூனேமிய ஸ்திரீயின் புத்திரபாக்கியத்தை உறுதிசெய்தல் (2 ராஜா 4:8-17). 6. அவள் குமாரனை உயிரோடே எழுப்புதல் (2 ராஜா 4:18-37), 7. கூழ் இருந்த பானையின் தோஷத்தை நீக்குதல் (2 ராஜா 4:38-41). 8. 100 பேருக்கு ஆகாரம் கொடுத்தல் (4:42-44). 9. நாகமானின் குஷ்டத்தைச்

சுகமாக்குதல் (5:1-9). 10. பொருளாசைக்காரனாகிய கேயாசியைச் சபித்தல் (5:20-27), 11. இரும்புக் கோடாரியை மிதக்கச் செய்தல் (6:1-7), 12. சீரியாவின் இராணுவத்துக்குக் கண் மயக்கம் உண்டாக்குதல் (6:18) இத்தோடு நிற்காமல், ஆபேல் மரித்தும் பேசுகிறான் என்பது போல், இந்த எலிசா மரித்த பின் அவன் எலும்புகள் பட்டு செத்துப் போனவர்களின் உயிர் திரும்ப வந்துள்ளது (13:21) என்ன சொல்வது!!

இப்பொழுது, இந்த அற்புதத் தீர்க்கனுடைய வாழ்க்கையை வைத்து நமக்கான சில பாடங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

**I. தேவன் உண்மையாயிருப்பவர்களின் நலனில் அக்கறை காட்டுகிறார் :**

அரிதானவைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்ட இந்த விவசாயத் தீர்க்கனுடைய அற்புதச் சம்பவங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், தனக்கு உண்மையாயிருப்பவர்களின் நலனில் தேவன் அக்கறை காட்டி வழிநடத்துகிறார் என்பது.

எலிசாவைக் கொண்டு தேவன் நடப்பித்த சில அற்புதங்களைக் கவனித்தால், தேவன் அவருடைய பிள்ளைகளின் வாழ்வில் எப்படிப் பரிவும், எவ்வளவு கரிசனையும் உடையவராயிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இது நம் நம்பிக்கையாயிருக்கிற தேவன் மீது நம் விசுவாசத்தை விருத்தியாக்கக் கண்டிப்பாக உதவி செய்யும்.

இந்த உண்மைக்கு உதாரணமாக, கீழ் உள்ள அற்புதங்களைக் கவனியுங்கள். தீர்க்கமுடியாத கடனில் சிக்கித் தவித்த நிலையிலும் விசுவாசத்தோடு வாழ்ந்த விதையின் எண்ணெயை பெருகச்செய்து, அதன் மூலம் அவள் கடனிலிருந்து அவளை மீட்டு, அவள் கண்ணீருக்கும் விடுதலை தந்தது (2 ராஜா 4:1-7) அடுத்து, பிள்ளைப் பேறு இல்லாதது பெரும் கேவலமாகக் கருதப்பட்ட அந்த நாட்களில், குழந்தை பாக்கியம் இல்லாத நிலையிலும் உனக்காக நான் பேச வேண்டிய காரியம் உண்டோ என்று தேவமனிதன் சார்பாகக் கேட்ட போது, " என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன் " என்று பவ்வியமாகப் பதிலளித்து தன் விசுவாசத்தை உறுதிபட வெளிப்படுத்திய (2 ராஜா 4:13) சூனேமியாளுக்குத் தான் அணைத்துக் கொள்ளும்படியாக ஒரு குமாரனைத் தந்தது (4:17) மற்றும் தனக்காகத் தங்களை அர்ப்பணித்து வாழ்ந்த தீர்க்கத்தரிசிகளின் புத்திரர் பசியாயிருந்த வேளையில், அவர்களுக்குக் காய்ச்சப்பட்ட கூழ், சாப்பிடக் கூடாமல் இருந்தபோது, அதை அவர்கள் சாப்பிடும்படியாக மாற்றி அவர்கள் பசியைப் போக்கியது (2 ராஜா 4:38-41) என்று.

ஆம், பரலோகத்தின் தேவன் அவருக்கு உண்மையாயிருப் பவர்களை நேசிக்கிறார், அவர்களுடைய சூழ்நிலையைக் காண்கிறார். அவருடைய திட்டத்தின்படியாக அவர்களுடைய குறைகளை நீக்குகிறார். அவர்களுடைய கவலைகளுக்கும், பாடுகளுக்கும், பாரங்களுக்கும், ஏன் கண்ணீருக்கும் விடுதலை கொடுக்கிறார். அன்றைக்கு மாத்திரமல்ல, இன்றைக்கு நம் ஆவிக்குரிய வாழ்வில் நம்மைக் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டிலும் இவ்வுண்மையை தேவன் பேதுரு அப்போஸ்தலனைக் கொண்டு வெளிப்படுத்திக் கொடுத்துள்ளார். *"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்"* என்று (1 பேதுரு 5:7) தேவனை விசுவாசிப்பவர் களுக்கு இதற்குமேல் வேறு என்ன வேண்டும்?

ஆகையால் அருமையானவர்களே, தேவனுக்கு எல்லாவகை யிலும் உண்மையுள்ளவர்களாக நாம் நம் ஆன்மீக வாழ்க்கையை நடத்து வோம். இங்கே ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆம், நம்முடைய தேவைகளுக்கும், பிரச்சனைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும், கவலைகளுக்கும் தேவன் அவருடைய சித்தத்தின்படியாகவும், திட்டத் தின்படியாகவும் தான் காரியமாற்றுவார் என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்டு, அவர்தம் திருச்சித்தத்திற்கு நம்மைச் சமூலமாக ஒப்புக் கொடுத்து பயத்தோடும், பக்தியோடும் ஆவிக்குரிய வாழ்க்கையை நடத்த வேண்டும்.

## II. தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறார்

அரிதானவைகளைக் கேட்டுக் பெற்றுக்கொண்ட இந்த விவசாயத் தீர்க்கனுடைய அற்புத சம்பவங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், தம்முடைய பிள்ளைகளுக்கு வரும் ஆபத்துகளிலிருந்து அவர்களை தேவன் பாதுகாக்கிறார் என்பது.

ஒரு சமயம் ஒருவர் சொன்னார், " ஆபத்தில்லாத இடம் கல்லறை தான் " என்று. இது எவ்வளவு உண்மையாயிக்கிறது. நாம் வாழக்கூடிய இந்த உலகம் ஆபத்துகளுக்குப் பஞ்சமில்லாத ஒன்றாகவே உள்ளது. ஆபத்துகளையும், பேராபத்துக்களையும் எல்லா நேரங்களிலும் எதிர் நோக்கி வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். என்ன நடக்கும், எப்பொழுது நடக்கும் என்பது குறித்த அறிவும், தெளிவும் இல்லாமல் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிற நிலையில், எல்லாவற்றையும் அறியும், ஆற்றல் கொண்ட தேவன் நம்மை வழிநடத்திப் பாதுகாக்க வல்லவரா யிருக்கிறார். இங்கே நன்றாக கவனித்துக்கொள்ளுங்கள். பாதுகாக்க வல்லவர் என்றுதான் கூறுகிறேனே தவிர, " பாதி காக்க " வல்லவர் என்று நான் குறிப்பிடவில்லை. பாதியை அவர் பார்க்கடடும், மீதியை நாம் தான்

பார்க்க வேண்டும் என்ற நிலை தேவன் மேல் நம்பிக்கை வைப்பவர்களுக்கு ஒருபோதும் வராது.

எலிசாவின் நாட்களில் தேவன் அவர்களைப் பாதுகாத்த விதத்தைப் பாருங்கள். அந்த நாட்கள் எலியாவின் வல்லமை எலிசாவில் வெளிப்பட ஆரம்பித்த நாட்கள். எலியாவின் சால்வையை வைத்து யோர்தானின் தண்ணீரை அப்பொழுது தான் பிரித்திருந்தார். அங்கே தீர்க்கத்தரிசிகளின் புத்திரர் உட்பட எரிகோவின் மனுஷர் தங்கள் பட்டணத்தின் நீரைக் குடிக்க முடியவில்லை. அத்தோடு நிலமும் விளைச்சலைக் கொடுக்க முடியாதபடி பாழ்நிலமாக இருக்கிறதென்று கூறினார்கள். அதாவது, தீர்க்கதரிசிகளின் புத்திரராகிய எங்களுக்கு அப்பமும், தண்ணீரும் இல்லாமல் சிரமப்படுகிறோம் என்றார்கள். அப்பொழுது தேவன் எலிசாவின் மூலமாக அவர்களின் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சுகமாகத் தங்கியிருக்க ஏற்பாடு செய்தார்.

வேறொரு சமயம் இஸ்ரவேலின் ராஜாவும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், ஏதோமின் ராஜாவையும் சேர்த்துக் கொண்டு மோவாபின் ராஜாவை எதிர்க்க ஏதோம் வழியாகப் போன போது, தண்ணீர் இல்லாமல் மூன்று ராஜாக்களும் மோவாபின் கையில் விழுந்து சாகவேண்டிய சூழ்நிலை *(2 ராஜா 3:10)*. ஆயினும் , கர்த்த ருக்குப் பயந்து வாழ்ந்த யோசபாத்தினிமித்தம் *(வ.14)* தேவன் காற்றும், மழையும் இல்லாமல் தண்ணீரை வரவழைத்து, ஒரு யோசபாத் தினிமித்தம் ராஜாக்களையும், படையினரையும், மிருக ஜீவன்களையும் காப்பாற்றி, கர்த்தருக்கு இது அற்பகாரியம் என்பதை வெளிப்படுத் தினார். *(வ. 18)* ஆம், தேவன் அவருடைய நாமம் தரிக்கப்பட்டு, அவருக்கு உண்மையாக வாழ்பவர்களை முழுமையாகப் பாதுகாக் கிறவராகவே இருக்கிறார். இதில் எவ்வித சந்தேகமும் நமக்கு எப்பொழுதும் தேவையில்லை.

இந்த உண்மையைத் தான் பேதுரு அப்போஸ்தலன் நமக்கு இவ்விதம் எழுதிக் கொடுத்துள்ளார். " கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் " *(2 பேதுரு 2:9)* என்று. தாவீது இதே கருத்தை இன்னும் நமக்குத் தெளிவாகப் புரியும்படியான பாணியில் வெளிப்படுத்தியுள்ளார். *நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார் " (சங். 34:17)* என்று. எல்லா உபத்திரவங்களுக்கும் என்று தாவீது இங்கே குறிப்பிடுவதைப் பாருங்கள். முழுமையாகப் பாதுகாக்கிற தேவன் நம் தேவன். மறுபடியும் சொல்லுகிறேன் அவர் பாதி காக்கிறவர் அல்ல, முழுமையாகப் பாதுகாக்கிறவர்.

ஆகையால், அன்பானவர்களே, ஆபத்து நிறைந்த உலகில் நாம் எல்லா வகையிலும் தேவனுடைய பலத்த கரங்களினால் பாதுகாக்கப்பட முதலில் தேவனுடைய பிள்ளைகளாக, கிறிஸ்து நமக்குக் கொடுத் திருக்கிற புதிய ஏற்பாட்டு உபதேச சட்டங்களின்படியாக, விசுவாசித்து (எபி. 11:6). மனந்திரும்பி (அப். 2:38) அறிக்கையிட்டு (ரோமர் 10:9, 10). பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று மாறவேண்டும். (அப். 22:16). பிறகு, தேவனுக்கு முன்பாக நீதியான வாழ்க்கையை நடத்த வேண்டும். இப்படிச் செய்யத் தீர்மானிப்போம்.

## III. தேவனால் ஆசீர்வதிக்கப்பட மிக முக்கியம் கீழ்ப்படிதல்

அரிதானவைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்ட இந்த விவசாயத் தீர்க்கனுடைய அற்புத சம்பவங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம். தேவனால் நாம் ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப் பட தேவனுக்கு கீழ்ப்படிவது அவசியம் என்பது.

எலிசாவின் அற்புத சம்பங்களிலிருந்து, தேவன் அவருக்கு உண்மையாயிருப்பவர்களின் நலனில் அக்கறை கொள்ளுகிறார் என்றும், தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறார் என்றும் கவனித்தோம். இன்னும் சில பாடங்கள் இதில் இருந்தாலும் அவைகளில் இன்னும் ஒன்றை மாத்திரம் உங்களுக்கு முன்பாகக் கொண்டுவர விரும்புகிறேன்.

எலிசாவைக் கொண்டு தேவன் நடப்பித்த அற்புதங்களில் அநேகர் அறிந்து வைத்திருப்பது சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமானின் குஷ்டம் நீங்கியது (2 ராஜா 5 ம் அதி). மருத்துவ விஞ்ஞானம் விண்ணை முட்டுமளவு வளர்ந்துள்ள இன்றைய நாட்களிலேயே தொழுநோய் முழுமையாக ஒழிக்கப்படாத நிலையில், அன்றைய நாட்களில் நிலை எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள். ஆனாலும், நாகமானின் குஷ்டம், எலிசாவின் வாயிலிருந்து வந்த தேவவார்த்தைகளின் வல்லமையால் குணமாகியது. இது அநேகராகிய நாம் அறிந்த ஒன்றாக இருக்கிறபடியால், மேற்கொண்டு இதை நான் விளக்க முற்படாமல் சம்பவத்திற்குள்ளே செல்ல விரும்புகிறேன்.

இவ்வளவு கடுமையான ஒரு பிரச்சனையில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த நிலையில் கூட நாகமான் தேவமனிதனின் வார்த்தை களுக்குக் கீழ்ப்படிய மனமற்றவனாக இருந்ததோடு கோபமும் கொண்டான் (5:11). இந்த நாகமானின் நிலையில் தான் பெரும்பாலான மனிதர்கள் உலகத்தில் வாழ்ந்து கொண்டுள்ளார்கள். குஷ்டரோகத்தைக் காட்டிலும், மிகவும் கொடுமையான பாவப்பிரச்சனையில் சிக்கிச் சீரழிந்து கொண்டுள்ளார்கள். அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான

வழிமுறைகளைத் தேவவார்த்தைகளிலிருந்து எடுத்துச் சொன்னால், அதற்கு இணங்க விருப்பப்படாதது மாத்திரமல்ல, கோபமும் அடைகின்றனர். பாவம் குஷ்டத்தைவிடக் கொடுமையானது என்று காரணத்தோடு தான் நான் சொல்லுகிறேன். எப்படியெனில் குஷ்டம் ஒரு மனிதனின் 70-80 ஆண்டுகால இம்மையின் வாழ்க்கையை மட்டும் பாதிக்கும். ஆனால் பாவம்? முடிவில்லாத ஆண்டுகளைக் கொண்ட நித்திய காலத்திற்கும் வாதிக்கும். அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்பட்டு வேதனை அடைய வேண்டும். இது கூடத் தெரியாமல், சத்தியத்தைச் சொன்னால் கோபப்படுகிறார்கள். எதிர்க்கிறார்கள், தூஷிக்கிறார்கள் என்ன செய்வது?

ஆயினும், தன் வேலைக்காரனின் பணிவான வேண்டுகோளுக்குச் செவிமடுத்து, தேவமனிதன் சொன்னது போல், கீழ்ப்படிந்து யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, நாகமானின் மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி அவன் சுத்தமானான். இவனுக்குக் கிடைத்த இந்த ஆசீர்வாதத்தின் இரகசியம் என்ன? கீழ்ப்படிதல் தான், வேறென்ன? எவ்வளவு கடுமையான பிரச்சினையாக இருந்தாலும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் போது அதற்கான தீர்வு கிடைக்கிறதென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தேவ வார்த்தைகளுக்கிருக்கும் வல்லமை வேறெதற்கும் கிடையாது.

அருமையானவர்களே, கீழ்ப்படிதல் தேவனை நம்புகிறவர்களிடம் எப்பொழுதும் எதிர்பார்க்கப்படுகிறது. கீழ்ப்படிதல் இல்லாமல் ஆசீர்வாதம், அது இம்மைக்குரியதாக இருந்தாலும், மறுமைக்குரியதாக இருந்தாலும் கிடையவே கிடையாது. இதைத்தான் சாமுவேல் தீர்க்கன் சவுல் ராஜாவுக்கு வலியுறுத்தினார். *"கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்"* என்று (1 சாமுவேல் 15:22).

நம் இரட்சகர் தேவ குமாரனாயிருந்தும் கீழ்ப்படிந்ததோடு, அந்தக் கீழ்ப்படிதலை நித்திய இரட்சிப்போடு, அதாவது நியாயத்தீர்ப்பு நாளில் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு சம்பந்தப்படுத்தி வைத்திருக்கிறார். இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகையால், நாம் ஒவ்வொருவரும் இம்மையில் சமாதானமும் சவுக்கியமுமுள்ளவர்களாய் வாழ்வதற்கும், மறுமையைப் பரலோகில் கழிப்பதற்கும் தேவ சத்தத்திற்கு எப்பொழும் கீழ்ப்படிகிறவர்களாக மாறுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!! ❀



# ஏன் நாங்கள் கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தார் என்று விசுவாசிக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்து, சிலுவையில் மரித்தார் என்கின்ற உண்மையை நிச்சயமாகவே நாமெல்லாரும் அறிந்திருக்கிறோம். அதுவே அவருடைய முடிவாக இருந்திருந்தால் எப்பொழுதோ அவர் மறக்கப்பட்டிருப்பார். ஆனால், இன்றும் அவர் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான இருதயங்களிலும், ஜீவியங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஏன்? இயேசு அந்தக் கோரக் குருசில் அறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு கல்லறையிலிருந்து உயிர்தெழுந்த காரணத்தினால் தான். ஆகையால் தான், நாங்கள் இன்றும் கிறிஸ்து மரித்த தோடல்லாமல் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று பறை சாற்றுகிறோம். இவ்வுண்மையின டிப்படையில், நாம் எபிரெய எழுத்தாளரோடு சேர்ந்து, “ இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று சொல்ல முடியும் (எபிரெயர் 13:8). ”

கிறிஸ்து உயிரோடிருக்கும்போதே, தான் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதாக வாக்கு செய்திருக்கிறார். இயேசு யூதர்களைப் பார்த்து, இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள்; மூன்று நாளைக் குள்ளே இதை எழுப்புவேன் என்று சொன்னார். ஆனால், யூதர்கள், இயேசு எருசசேலம் தேவாலய கட்டிடத்தைப் பற்றித்தான் பேசுகிறார் என்று நினைத்து, இயேசுவைப் பார்த்து, இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள் (யோவான் 2:19-21). மறுபடியுமாக, அது முதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய் மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீடர்களுக்குச் சொல்லத் தொடங்கினார் என்று விசுவாசிக்கிறோம். (மத்தேயு. 16:31). அந்நேரத்தில் சீடர்களுக்கு இயேசு சொன்ன வைகளின் முக்கியத்துவம் புரியவில்லை. ஆனால், ஒரு நாள் வந்தது. அதில் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்ணாரக் கண்டபோது, இயேசு சொன்னவைகளை நினைவு கூர்ந்து அதைப் புரிந்து கொண்டார்கள்.

கிறிஸ்து அநியாயமாய் விசாரிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மிகுந்த வேதனையுள்ள மரணத்தை சந்தித்ததற்குப் பிறகு, வேத வசனம் இப்படியாகச் சொல்கிறது, " சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீஷனும், ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்ததில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்த சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டி யிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான். அங்கே மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள் " (மத்தேயு 27;57-61). அந்தச் சமயத்தில், இயேசு இத்தோடு முடிந்தார் என்பது போல் தெரிந்தது. சீடர்கள் கூட, ஒருவேளை அதிர்ச்சியில் இருந்திருந் தாலும், இயேசுவுக்கு முடிவு வந்துவிட்டது என்பதை ஏற்றுக் கொண்டது போல் தெரிகிறது. எப்படியெனில், அவரவர் தங்கள் தங்கள் வீடுகளுக்கும், விட்டு வந்த தொழிலுக்கும் திரும்பிச் செல்ல நினைக்கத் தொடங்கி விட்டார்கள். இது ஒரு பக்கம் இருந்தபோதிலும், இயேசுவின் சத்துருக்கள் இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவதாகச் சொன்ன வார்த்தைகளை மறக்கவில்லை. எனவே, நாம் இப்படி வாசிக்கிறோம். " ஆயத்த நாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து; ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும் போது, மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப் பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய் கொண்டு போய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் பத்திப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து; உங்களுக்குக் காவல் சேவகர் உண்டே; போய், உங்களால் கூடிய மட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரை போட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள் (மத்தேயு 27:62-66). "

இதற்கு முந்தின வசனப்பகுதியில், அவர்கள், கிறிஸ்து உண்மையாகவே கல்லறையிலிருந்து உயிரோடு வருவார் என்பதை

விசுவாசிக்கவில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். ஆனால், சீஷர்கள் வந்து இயேசுவின் உடலைத் திருடிக் கொண்டு போய், அதன் விளைவாக இயேசுவின் புகழ் முன்பு இருந்ததை விட அதிகமாகிவிடும் என்று பயந்தார்கள். அப்படி நடக்காதபடி நிச்சயப்படுத்த, அவர்கள் கல்லறைக்குச் சென்று அது ஒழுங்காக முத்திரை போடப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்துவிட்டு, அங்கே இரண்டு மனுஷரைக் காவல் போட்டார்கள்.

நாம் தொடர்ந்து வாசிக்கும்போது, வேத வசனம் இப்படிச் சொல்கிறது. " *ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்து*" வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலில் இருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி; நீங்கள் பயப்படாதிருங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும், மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிர மாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிற போது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு; வாழ்க என்றார். அவர்கள் கிட்ட வந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி; பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார் (மத்தேயு 28:1-10). இது இயேசுவின் சீஷர்கள் அவருடைய உடலைத் திருடிக்கொண்டு போக ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி தெரிகிறதா? இல்லை. மாறாக, அவர்களும் காவல் சேவகரைப் போல ஆச்சரியந்தான் அடைந்தார்கள். அப்போஸ்தலர்களில் சிலர் இதை ஆரம்பத்தில் சந்தேகப்படக் கூடச் செய்தார்கள்.

இது விநோதமாக இருந்தபோதிலும், இன்றும் இயேசு உண்மையிலேயே சிலுவையில் மரிக்கவில்லை என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். எனவே, கல்லறையில் அவர் வைக்கப் பட்ட போது, இரவு வேளையயில் அவர் தப்பித்து விட்டார் என்று சொல்கிறார்கள். இது நியாயமற்றது. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் முழு வோதகமமும் கிறிஸ்து கல்லறை யிலிருந்து எழுந்தார் என்கின்ற உண்மைக்கு சாட்சி பகர்கின்றன. அது மாத்திர மல்ல, இரட்சிப்பு, ஞானஸ்நானம், சபை, கர்த்தருடைய பந்தி இன்னும் ஒட்டுமொத்த கிறிஸ்தவமும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அடிப்படையாகவும், மையமாகவும், வைத்துதான் காணப்படுகிறது. வேறு சிலர் இவைகளையெல்லாம் போதிக்கும்படி வேதாகமம் மாற்றப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் யார் இதை மாற்றி யிருப்பார்கள்? யூதர்கள் அல்ல. ஏனென்றால், அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. வேத வசனங்கள் வெளிவந்த போது புறஜாதிகள் ஒட்டு மொத்தமாக அவிசுவாசி களாகத்தான் காணப்பட்டார்கள். ஆக இதற்கும் வாய்ப்பில்லை. மேலுமாக, நமக்கு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு, அதாவது, கி.மு. 200 ம் ஆண்டு வரை, வேத பகுதிகள் குறிப்பாக பழைய ஏற்பாட்டு வேத எழுத்துக்கள் அப்படியே இருக்கின்றன. அப்படியானால், திட்டமாகவே வேதாகமம் சத்தியத்தை, தேவனுடைய பரிசுத்த எழுத்துக்களை அடையாளப்படுத்துகிறதென்றே நமக்குத் காட்டுகிறது. அத்தோடு, கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதைத் திட்டமாகவும், தெளிவாகவும் போதிக்கிறது.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்தெழுந்ததை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் இன்னும் ஜீவிக் கிறார் என்பதையும், ஒரு நாளில் தம்முடைய சரீரமாகிய சபைக் காகத் திரும்ப வருவார் என்பதையும் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இதுகாறும் ஒரு விசுவாசியாக இல்லாவிட்டால், நீங்கள் ஒவ்வொருவரும் விசுவாசி யாக மாற வேண்டும் என்பது எங்கள் ஜெபமாயிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16; அப். 2:47).

பெண்கள் பகுதி

# விசுவாசம், கிறிஸ்தவத்தின் அஸ்திபாரம்

*"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (1 யோவான் 5:4,5)."*

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6).

தேவனோடு ஒருவர் உறவு வைத்துக் கொள்ள அவசியமானது விசுவாசம். கிறிஸ்தவ உலகில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிற விசுவாசம் என்ற வார்த்தை தவறாகப் புரிந்து கொண்ட ஒரு வார்த்தை யாகத்தான் இருக்கிறது. வேதாகமம் விசுவாசம் பற்றி மிகத் தெளிவாகப் பல உதாரணங்களை உள்ளடக்கியுள்ளது.

எது விசுவாசமில்லையென்று பார்போமானால், விசுவாசம் என்ற வார்த்தைக்கான சரியான பொருளை நாம் சரியாகப் புரிந்துகொள்ள ஏதுவாயிருக்கும். விசுவாசம் என்பது குருட்டுத்தனமானதோ அல்லது சிந்தனையை செயல்படாமல் வைத்து ஏமாற்றக்கூடிய ஒன்றோ அல்ல. இன்னும் ஒரு வகை மக்கள் இருக்கிறார்கள், அவர்களைக் கேட்டால் யார் சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும், கேள்வியே கேட்கக் கூடாது, புரிந்துகொள்ளவோ சிந்திக்கவோ கூடவேகூடாது என்று சொல்வார்கள். இதை ஏறக்குறைய மூடபக்தி அல்லது மூடநம்பிக்கை என்றே சொல்லலாம்.

வேதாகமம் முற்றிலும் வித்தியாசமான கருத்தைச் சொல்லுகிறது. பவுலடியார் கூறும்போது, விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17) என்கிறார். தேவன் சொன்ன சாட்சிகள் தான் விசுவாசத்திற்கு அடிப்படையேயொழிய மனிதனுடைய சாட்சியல்ல. யோவான் கூறும்போது தேவன் சொன்னதை நம்பவேண்டும் என்கிறார் (20:30,31). வேதத்தைப் போதிக்கிறவர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து போதிக்கிறார் களா? என்று கவனிக்க (அப். 17:11) வேண்டும். விசுவாசம் என்பது ஏமாற்றக்கூடிய ஒன்று அல்ல அதற்கு எதிரனது.

விசுவாசம் என்பது உணர்ச்சிவசப்படக் கூடிய ஓர் உணர்வோ, தன் கையால் மார்பில் அடித்துக்கொள்ளக் கூடிய ஒன்றோ அல்ல. இவைகள் முற்றிலும் வேதாகமத்திற்கு எதிரானது. வேதாகமம் போதிக்கிற விசுவாசம் என்பது முற்றிலும் அறிவுசார்ந்த பல உண்மைகளை உள்ளடக்கிய ஒன்று (ரோமர் 10:17). பவுல் கூறும்போது நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் (2 தீமோ. 1:12) என்கிறார். கலாத்தியரைப் பார்த்துக் கேட்கும்போது, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? என்று பவுல் கேட்கிறார் (கலா. 3:2). விசுவாசம் எப்போதும் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

விசுவாசம் என்பது முட்டாள்தனமானதல்ல. விசுவாசம் என்ற பெயரில் விஷ மருந்துகளை உண்பதோ, சாவுக்கேதுவான பூச்சிகளை எடுத்துக்கொள்வதோ முட்டாள்தனமானது. வேதம் சொல்லியிருக்கும் விசுவாசத்தைத் தயவுசெய்து இவைகளோடு சேர்த்துப் பார்க்கக்கூடாது, விசுவாசிகள் என்று சொல்லக்கூடியவார்கள் எப்போதும் பரிசுத்த முள்ளவர்களாயும், சுயக்கட்டுப்பாடுள்ளவர்களாயும், மேலும் பகுத்துப் புரிந்து கொள்ளக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தன்னை யார் என்று நிரூபிப்பதற்காக தேவாலயத்து உப்பரி கையிலிருந்து தாழக் குதிக்கவில்லை (மத்:4:5:7).நம்பமுடியாதவை களையும், அர்த்தமற்றவைகளையும் தங்கள் மனதிலே மிகவும் பிடிவாதமாக ஏற்றுச் செயல்படுபவர்களைப் பார்க்கும் போது ஆச்சரி யமாக உள்ளது. அது எவ்வளவு கவர்ந்து கொள்ளப்படும் ஒன்றாக இருந்தாலும் அது தேவனுடையதல்ல.

விசுவாசம் என்பது அறிவுசார்ந்த ஒன்றல்ல. ஒன்றைப் புரிந்து, விளங்கி, பார்த்து, தொட்டு, உணர்ந்து பிறகு எற்றுக் கொள்ளக்கூடியது விசுவாசமல்ல. வேதம் இப்படியாகச் சொல்லுகிறது, நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் (2 கொரி. 5:7). தேவன் ஒன்றை சொல்லியிருக்கிறார் என்றால், அது நம்மால் முழுவதும் புரிந்து கொள்ள முடியவில்லையென்றாலும் சிந்தித்து, சிந்தித்து வீணாகப் போவதைக் காட்டிலும் அதை நம்பி ஏற்றுக்கொண்டால் அதுதான் விசுவாசம்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! விசுவாசம் பற்றி படித்துக் கொண்டிருக்கிறோம். எது விசுவாசமில்லை என்று சிறிது படித் தோம். அப்படியென்றால் எது விசுவாசம் என்று வேதத்தின் துணை கொண்டு படிப்போம். பல காரியங்கள் இருந்தாலும் வெகு சில பதில் களை வசன ஆதாரத்தோடு கற்றுக்கொள்வோம்.

தவறான புரிந்து கொள்ளுதலிலிருந்து கொஞ்சம் தெளிவு பெற்று வெளியே வந்திருக்கும் நாம், தேவன் விசுவாசம் பற்றி என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். பொதுவாக மக்கள் விசுவாசம் பற்றிய விளக்கம் ஒரே ஒரு வரியில் இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள் சிலர்

எபி. 11:1 ஐ கூறி விளக்குவார்கள். அதிக அர்த்தங்களடங்கிய ஒரு விஷயத்தைச் சுருங்கச் சொல்ல முயற்சிக்கும் போது அதுவே அந்த விஷயத்தைத் தவறாகப் புரிந்துகொள்ளச் செய்துவிடும். எனவே பல வசனங்களை ஆதரமாக வைத்து விசுவாசம் என்றால் என்ன என்று கற்றுக்கொள்ளலாம். இது ஒரு வைரத்தை வெட்டினால் எப்படி பண்முகங்களை உள்ளே பார்க்க முடியுமோ அதுபோன்று தான். பண்முகம் கொண்ட வைரச் சிதறல் போன்றது தான் விசுவாசம்.

தேவன் தன் வார்த்தையில் சொல்லியிருப்பவைகளை நம்புவது தான் விசுவாசம். மீண்டும் அதே வசனம் தான்.

**விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10 : 17):**

விசுவாசத்தின் தரமும்,அளவும் வேதத்தை நாம் படித்துப் புரிந்து கொள்ளுவதைப் பொறுத்துத் தான் அமையும்.

விசுவாசம் என்பது தேவனையும்அவருடைய குமாரனையும் நம்புவதாகும். விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்திரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது கீழ்ப் படிந்து, தான்போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப் பட்டுப் போனான் (எபிரெயர் 11:8). பவுல் அப்போஸ்தலன் கூறும்போது அதினிமித்தம் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன் ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை. ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன் (2 தீமோ. 1:12) என்கிறார். ஆக வாழ்வானாலும், சாவானாலும் தேவனையே நம்பியிருப்பது தான் விசுவாசம்.

விசுவாசம் என்பது தேவனுடைய கண்டிப்பையும், வாக்குத்தத் தங்களையும் நம்பி ஏற்றுக்கொண்டு அதற்கேற்றாற் போல் வாழ்வது. சாராள் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். (எபி. 11:11) தேவனுடைய அருமையான வாக்குத்தத்தங்களை விசுவாசத்தால் தான் பெற்று அனுபவிக்க முடியும். மழை என்றால் என்ன என்று தெரியாமலேயே மழை வரும் என்று தேவன் சொன்னதை நம்பி அவ்வளவு பெரிய பேழை யைக் கட்டினாரே நோவா. என்னவென்பது? எனவே தான் அவன் குடும்பம் அழியாமல் காக்கப்பட்டது. (எபி 11:17) . எப்பேர்ப்பட்ட விசுவாசம் இது!!!

விசுவாசம் என்பது தேவன் எதைச் செய்ய சொன்னாரோ அதை அப்படியே செய்வது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் (கலா. 5:6). ஏன் காயீனுடைய பலியை நிராகரித்து ஆபேலுடைய பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டார்? விசுவாசம் தேவனுடைய வார்த்தையினாலே வரும் என்பது (ரோமர் 10 : 17) உண்மையானதாக

இருப்பதால் ஒருவேளை தேவன் ஆபேலிடம் மிருகத்தைப் பலியாகக் கொடுக்கும்படி சொல்லியிருப்பார். ஏனென்றால் விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கையைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார். (எபி. 11:4) என்று வாசிக்கிறோம். காயீனும் பலி செலுத்தினான். தேவனுடைய வார்த்தையின்படி பலி செலுத்தவில்லை, எனவே தேவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அருமையானவர்களே, நாம் தேவனை ஆராதிக்கும் முறை, நம்முடைய இரட்சிப்பு, நாம் தேவனுக்குக் கொடுப்பது இப்படி எதுவாக இருந்தாலும் அவைகள் தேவன் சொன்னபடி தான் இருக்க வேண்டும். காயீனுடைய பலி ஒருவேளை விலையிலே ஆபேலின் பலியை விட உயர்ந்ததாக இருக்கலாம், மிக உண்மையாக, மிக சரியான விதத்திலே இருந்திருக்கலாம், ஆனால் தேவன் சொன்னபடி இல்லை. தேவன் சொன்னதை காயீன் விசுவாசிக்க வில்லை. எனவே தன் விருப்பப்படி செய்து ஏமாற்றமடைந்தான்.

விசுவாசம் என்பது அளவுக்குமீறி நம்முடைய விருப்பத்திற்கு எதிரானதாகவும், அபாயகரமானதாகவும் இருந்தாலும் தேவனுடைய வார்த்தையின்படி செய்ய ஒப்புக் கொடுப்பது. இதை அப்படியே அனுபவித்து செய்து முடித்தவர் ஆபிரகாம், உன் மகனை பலி செலுத்து என்று தேவன் சொன்னபோது அந்த வயதான தகப்பனுக்கு இந்த வார்த்தை ஒரு கசப்பானதாக இருந்திருக்குமா? அவர் மனம் இதை விரும்பியிருக்குமா? அதுவும் தன்னுடைய ஒரே மகன். தேவன் தனக்கு கொடுத்த பல்வேறு வாக்குத்தத்தங்களையும் இவன் முலமாய்த் தான் நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆபிரகாமும், சாராளும் மீண்டும் ஒரு குமாரனைப் பெற்றுக்கொள்ள எந்த முகாந்தரமும் இல்லை. ஆனாலும் தேவன் சொன்னதினால், தேவ வார்த்தையை மீறமாட்டேன் என்று ஆபிரகாம் செய்தார். அதைத் தவிர வேறு எந்த பதிலை நாம் இங்கே கொடுக்கமுடியும் நம் அறிவைப் பயன்படுத்தி? சொல்லுங்கள், இதுதான் விசுவாசம். முற்பிதா இப்படிச் செய்திருப்பாரென்றால் இதை விட பெரிய வேலையைச் செய்யும்படி தேவன் நம் யாரிடமும் ஒருபோதும் கேட்கவில்லை. சிறிய, சிறிய தியாகங்கள், நம் விருப்பத்திற்கு மாறான காரியங்களை தேவனுக்காக செய் என்றால் நம் விசுவாசம் ஓடி ஒளிந்து கொள்கிறது. என்னால் அப்படி முடியாது. அப்படியொரு கிறிஸ்தவம் எனக்கு வேண்டாம் என்று வாய் கூசாமல் சொல்லி தேவ சித்தத்தை சர்வ சாதாரணமாக மீறி விடுகிறோம்.

விசுவாசம் என்பது சில வேளைகளில் அபாயகரமான பாதையில் வழிநடந்து செல்வது. விசுவாசத்தினாலே அவர்கள் (இஸ்ரவேலர்கள்) சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்து போவதுபோலக் கடந்து போனார்கள் (எபி. 11:29). தங்களுடைய உடைமைகளோடு

அவ்வளவு பெரிய வேலையை நம்பி செய்தார்கள். தப்பித்துக் கொள்ள அவர்கள் கடந்த அந்தப் பாதை மிகவும் அபாயகரமானது. பிசாசு நமக்கு ஒரு சிறிய பயத்தைக் காட்டினாலும் நாம் துணிந்து மேற்கொண்டு தேவன் சொன்னபடி செய்வதில் தீவிரம் காட்ட வேண்டும். பயப் படாமல் விசுவாசிக்க வேண்டும்.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாத வைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி. 11:1). இதை எழுதிய ஆசிரியர் பரலோகத்தை நேரில் பார்க்கவில்லை. ஆனால், அவருக்கிருந்த விசுவாசம் பரலோகத்தைப் பற்றிய உண்மையை நம்பி நிரூபிக்க வைத்திருக்கிறது.

விசுவாசம் பற்றி இன்னும் எழுதிக்கொண்டே போகலாம். விசுவாசம் என்பது வளர வேண்டும். ஆபிரகாம் போல் எனக்கு விசுவாசம் இல்லையே என்று சோர்ந்து போகவோ, பின் வாங்கவோ வேண்டாம். நாமும் ஆபிரகாமுடைய விசுவாசத்தின் அளவுக்கு நம் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள முடியும். இயேசுவின் சீடர்கள் சிலர் அற்ப விசுவாசி களாயிருந்தார்கள் (மத். 6:30). பர்னபா என்பவன் விசுவாசத்தில் நிறைந்தவனாயிருந்தான் (அப். 11 ;24). தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலே விசுவாசம் வருகிறதாயிருக்கிறதினால் (ரோ.10:17) தேவனுடைய வார்த்தையை அனுதினமும் வாசித்து வளர்வோம். அப்படிச் செய்யும்போது கிடைக்கும் விசுவாசம் நம்மை சோதனை யினின்று இரட்சித்து, பாவம் செய்யாமல் பாதுகாக்கிறது.

விசுவாசத்தை துவக்கினவரும், முடித்தவரும் நம் இயேசு (எபி. 12: 2) பாவிகளாகிய நாம் நடுங்கி அவருடைய கிருபையினாலேயும், இரக்கத்தினாலேயும் மன்னிப்பைத் தேடும் அந்நாளில் நாம் நம் விசுவாசத்தை துவக்குகிறோம். நம் வாழ்வு இப்பூமியிலே முடியும் போது விசுவாசம் முடிவடைகிறது. நித்தியத்திற்குச் செல்லும்போது நம் விசுவாசம் அந்த நித்தியத்தை பார்க்கச் செய்கிறது.

அருமையானவர்களே! நித்தியம் பற்றி பேசும்போது அதற்கும் தேவன் சொன்னபடி செய்வது அவசியம். மனிதன் தன் விருப்பபடி தன்னை இரட்சித்துக் கொள்ளமுடியாது. அப்படியானால் இரட்சிப்புக் கேதுவான விசுவாசம் அவசியம் (ரோமர் 10:9). மேலும், எபே. 2:8ல் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்று பார்க்கிறோம். தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று வாயினாலே அறிக்கையிட்டு, பாவங்கள் போக தண்ணீரில் முழ்கி ஞானஸ்நானம் பெறும்போது இரட்சிக்கப்படுகிறோம். இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களைத் தான் இயேசு கிறிஸ்து நித்தியமான பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார். இதையும் நாம் விசுவாசித்து, செயல்படுத்தினால் தான் பரலோகத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும், விசுவாசிப்போம், தேவன் அதற்கு உதவி செய்வாராக. ஆமென்.

வாலிபர் பகுதி

# வேலைக்கு ஆட்கள் தேவை

Bro. பென்னி மார்ட்டின்

பிரியமான வாலிப உள்ளங்களே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்கள். அன்பானவர்களே! புதிய ஏற்பாட்டில் ஒரு கிறிஸ்துவனுக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள உறவானது ஓர் எஜமானுக்கும் அடிமைக்கும் இடையே உள்ள உறவாக உருவகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பெரும்பாலும் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லது அடிமையென்றுதான் காட்டுகிறார் (ரோமர் 1: 1; கலா. 1:10). வாலிபர்களாகிய நாம் சிலர் முழு நேர ஊழியத்தில் ஈடு பட்டிருக்கிறோம். சிலர் உலகப்பிரகாரமான வேலை செய்து கொண்டு ஊழியம் செய்கிறோம். இன்னும் சிலர் கிறிஸ்துவின் சபையில் விசுவாசி களாக அங்கம் வகிக்கிறோம்,எப்படியாயினும் வாலிபர்களாகிய நாம் தேவனாகிய எஜமானுக்கு வேலைக்காரர்களாக இருக்கிறோம். உலக மெங்கும் போய் சர்வதிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரங்கியுங்கள் என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரம் கட்டளை கொடுக்க வில்லை, அக்கட்டளை எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். அதிலும் குறிப்பாக இந்தக் காரியத்தில் வாலிபர்களின் பங்கு மகத்தானது. இப்படி நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து,ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாவிட்டால் நாம் வெறுங்கையோடு கர்த்தரை சந்திக்க வேண்டி யிருக்கும். இந்த உலகத்தில் எந்தனையோ வாலிபர்கள் தங்கள் தவறான பழக்க வழக்கங்களினால் அழிந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆத்துமாவில் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களைக் குறித்து நாம் ஆத்தும பாரம் உடையவர்களையிருக்கன் அதில் பிரியமாயிருப்பார். நாம் நம் எஜமானாகிய கிறிஸ்துவின் அடிமைகளா யிருக்கிறோம். பழங்காலத்தில் அடிமைகள் தங்கள் எஜமான்களுடைய பெயரால் குறிக்கப்பட்டார்கள். அவர்கள் எந்த எஜமானுடையவர்கள் என்பதை அடையாளம் காட்டுவதற்காக அப்படி முத்திரையிடப் பட்டார்கள். வாலிபர்களாரிய நாம் தேவனுக்கு அடிமைகளாக அல்லது வேலையாட்களாக இருக்கிறபடியால் நாம் தேவனுக்கு அடிமைகளாக எப்படி இருப்பது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். சரி, புதிய ஏற்பாடு நல்ல வேலையாட்களாக எப்படி இருப்பது என்பது பற்றி என்ன கூறுகிறது? ஒரு நல்ல வேலைக்காரன் கீழ்ப்படிகிறவனாக இருக் கிறான். இது தான் ஒரு நல்ல வேலைக்காரனின் முதன்மையான கடமை யாகும். ஒரு நல்ல வேலைக்காரன் கிறிஸ்துவின் வேலைக்காரனாவதற்கு அவசியப்படும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிகிறவனாக இருக்க வேண்டும். பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும்போது, முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும் இப்போது

உங்ளுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசச் சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வ மாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்திற்கு நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6: 17,18). அப்போஸ்தலனாகிய பேதுரு இதை சத்தியத்திற்கு கீழ்ப்படிகிற தாகச் சொல்கிறார் (1 பேதுரு 1: 22,23). நம் அருமை இரட்சகர் இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் பிதாவுக்கு எல்லாவிதத்திலும் கீழ்ப் படித்தார். அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும் பட்ட பாடு களினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். மேலும், ஒரு நல்ல வேலைக்காரன் தன் எஜமானுடைய எல்லாக் கட்டளைக்கும் கீழ்ப்படி கிறான். பவுல் தன் காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும் போது அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியச் செய்யுங்கள் என்று புத்திமதி சொன்னார் (கலாத்தியர் 5:13). உண்மையான மேன்மைக்கு கீழ்ப்படிதல் தான் சூத்திரமாக இருக்கிறது. மேற்சொல்லப்பட்ட காரியங்களை நாம் செய்யாமல் எப்படி அவருடைய வேலைக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்?

### ✫ ஒரு நல்ல வேலைக்காரன் ஜாக்கிரதையுள்ளவனாக இருக்கிறான்

ஒரு நல்ல வேலைக்காரன் தன் எஜமானின் சித்தம் அல்லது விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்ள ஆசையாயிருக்கிறான். பவுல் தீமோத் தேயுவுக்கு சொல்லும் போது நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்று அறிவுறுத்துகிறார் (2 தீமோ. 2:15). ஒரு நல்ல வேலைக்காரன் அவருடைய சேவையில் ஜாக்கிரதை யாயிருக்கிறான். ரோமர் 12:11-ல் நாம் வாசிக்கும்போது அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள் என்று பவுல் சொல்கிறார். நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதை மிக அவசியமானதாகும் (எபி. 4:11). சோம்பேறியான வேலைக்காரன புறம்பான இருளில் தள்ளப்படுவார் (மத்தேயு 25:26,30). நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிர தையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் (மேற்கூறப்பட்ட கிருபை களை) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை (2 பேதுரு 1:10) என்று பேதுரு சொல்கிறார்.

### ✫ ஒரு நல்ல ஊழியக்காரன் தைரியமுள்ளவனாயிருக்கிறான்

மோசே நாற்பது வருடங்களாக தேவனுடைய வேலைக்காரனாக இருந்த பிறகு அதாவது மோசேயின் மரணத்திற்குப் பிறகு தேவன் அந்த இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும்படி யோசுவாவைத் தெரிந்து கொண்டு பலங்கொண்டு திட மனதாயிரு என்று சொல்லி தேவன் தைரியப்படுத்தினார் (யோவான் 1:6). மேலும், அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்தவர்களை தங்கள் விசுவாசத்தோடு தைரியத்தை கூட்டி

வழங்குங்கள் என்று புத்திமதி சொல்கிறார் (2 பேதுரு 1:5). பேதுருவும் யோவானும் இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று கட்டளையிடப்பட்டார்கள் ஆனால், அதற்குப் பேதுருவும், யோவானும் பயப்படாமல் இயேசுவின் நாமத்தைக் குறித்து தைரியமாய் பேசினார்கள். ஒரு இராணுவ வீரன் எப்படித்தன்னுடைய தளபதியின் கட்டளையின்படி செயல்படுவானோ அதுபோல நாம் நம்முடைய தளபதியாகிய கிறிஸ்துவின் கட்டளை களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படிச் செய்ய அந்த வீரனுக்கு எப்படி துணிச்சலும், தைரியமும் தேவைப்படுகிறதோ, அது போலவே நமக்கும் அந்தத் துணிச்சலும் தைரியமும் தேவை.

**✿ ஒரு நல்ல வேலைக்காரன் தன் எஜமானுக்கு தன்னை அர்ப்பணிக்கிறவனாக இருக்கிறான்**

பழங்கால இஸ்ரவேல் தேசத்தில் வேலைக்காரன் ஒருவன் தன்னுடைய எஜமானைவிட்டுப் பிரிய மனதில்லாதிருந்தால் அவனுடைய சரீரத்தில் நிரந்தரமாக குறி அல்லது அடையாளம் போடப்படும் (யாத் 21:1-6). அவன் தன்னுடைய சரீரத்தில் எஜமானுடைய அடையாளத்தைத் தரித்துக் கொள்ளுகிறான். அப்போஸ்தலனாகிய பவுல் தான் கர்த்த ராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களைத் தன்னுடைய சரீரத்தில் தரித்துக் கொண்டிருக்கிறதாகச் சொல்கிறார் (கலாத்தியர் 1:10). பிரியமான வாலிபர்களே! நீங்கள் இது போன்ற குணாதிசயங்களைப் பெற்றிருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விருப்பமுள்ளவர் களாயிருக்கிறீர்களா? அவருக்கு ஊழியக்காரனாயிருப்பது என்பது ஒரு ராஜாவாக இருப்பது போன்றதாகும். நாம் முழுமையான சுதந்திரத்தைப் பெற ஒரே வழி அவருக்கு அடிமையாக இருப்பது தான் (யோவான் 8:30; ரோமர் 6:18, 22).

ஆகையால், அன்பான வாலிபர்களே! மேலே நாம் பார்த்த கருத்துக்களின்படி நாம் உண்மையாகவே தேவனுடைய வேலைக்காரர் களாக இருக்கிறோமா என்று எண்ணிப்பாருங்கள். வேலைக்காரர்களாக மாற தீர்மானம் எடுங்கள். ✿

## வேத வசனங்களைப் படிப்பதன் முக்கியத்துவம்

நாம் *வேத வசனங்களால்* நியாயந்தீர்க்கப்படுவோம். (யோவான் 12 : 48)

நம் இரட்சிப்பு *வேத வசனங்களை* சார்ந்திருக்கிறது. (ரோமர் 1 : 16)

நம் விசுவாசம் *வேத வசனங்களினால்* உண்டாகிறது. (ரோமர் 10 : 17)


நம் வளர்ச்சி *வேத வசனங்களினால்* ஏற்படுகிறது. (1 பேதுரு 2 : 2)

நம் மகிழ்ச்சி *வேத வசனங்களினால்* கிடைக்கிறது. (சங்கீதம் 1 : 2)




# சிலந்திகளிடமிருந்து.....

Bro. ஏபில் நாயகம்



இயேசு கிறிஸ்துவினால் அதிகம் நேசிக்கப்படுகின்ற என் அன்பு தம்பி! தங்கைகளே! உங்கள் யாவரையும் வாழ்த்து கிறேன். நீங்கள் தொடர்ந்து இப்பகுதியை படித்துப் பயன் பெற்றுக் கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். இம்மாதம் சிலந்திப் பூச்சிகளிடம் இருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வோமா? வாருங்கள் என்னோடு.

சில முக்கியமான ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுதர வேதாகமம் அடிக்கடி செடிகளையோ, பூச்சிகளையோ அல்லது மிருங்களையோ பயன்படுத்துகிறது என்பது உங்களுக்குத் தெரியும் தானே. இயேசு ஒருமுறை தமது சீடர்களைப் பார்த்து, ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால், நீங்கள் சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும், புறாக் களைப் போல கபடற்றவர்களுமாய் இருங்கள் என்று கூறினார். ஏனென்றால் இயேசு தனது சீடர்கள், எல்லா நேரமும் விரும்பப்பட மாட்டார்கள், என்பதால் அவர்கள் சரியாகவும் அறிவுத்திறனோடும் செயல்பட வேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினார். நீதிமொழிகளின் ஆசிரியர் (6:6)ல் நீ எறும்புகளிடத்தில் சென்று அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைப் கற்றுக்கொள் என்று அருமையான கருத்தைக் கூறுகிறார். நாம் அதை இச்சிறுவயதிலிருந்தே செய்ய வேண்டும். எதில் எல்லாம் செய்ய வேண்டும்? அன்றாட சரீர வாழ்க்கையில் மட்டுமல்ல! ஆவிக்குரிய வாழ்க்கையிலும் எறும்பைப் போல செயல்பட வேண்டும். வேதாகமம் சிலந்திகளையும் ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுத்தரும்படி உபயோகிக்கிறது.

நீதிமொழிகளிலே நாம் இந்த வசனங்களை வாசிக்கலாம். தன் கைகளினாலே வலையைப் பின்னி அரசர் அரமனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே *(30:38)* இதற்கு முன்னால் உள்ள வசனங்களில்

ஆசிரியர் எறும்புகளைப் பற்றியும் கூறியுள்ளார். அவர் கூறவரும் கருத்து என்னவென்றால், மேற்சொன்ன பூச்சிகள் அனைத்தும் பெரியதாகவோ அல்லது பலமுள்ளதாகவோ இல்லை? அப்படியென்றால் அவைகள் மிகவும் அறிவாக செயல்பட்டு தங்கள் தாலந்துகளை முறையே பயன் படுத்துவதால் தான். சிலந்திகள் தங்கள் சிறந்த இருப்பிடமான வலைளை தங்கள் உடம்பிலிருக்கிற சில திரவியங்களைக் கொண்டு கட்டுகிறது. தனது வலையில் சிக்கும் உணவை தனது சிறு கையினால் பிடித்து உட்கொள்கிறது. சிலந்தி தன் உருவத்தில் சிறியதாயிருந்தாலும் அது மிகவும் பெலமுள்ளதாயும் கூர்ந்த அறிவுடையதாகவும் இருக்கும். அதன் உருவமும் பிறரை ஏமாற்றக் கூடியதாயிருக்கிறது.

தீர்க்கதரிசியான ஏசாயாவும் சிலந்திகளைக் கொண்டு முக்கிய மான பாடங்களைக் கற்றுத்தருகிறார். மிகுந்த தீமையான மனிதரைப் பற்றி பேசும் போது இப்படி பயன்படுத்துகிறார். அவர்களைச் சுற்றி இருந்த ஜனங்களை தீமையின் வலையில் சிக்கவைக்கும்படியாக வகை தேடினார்கள் என்று ஆனால் அடுத்த வசனத்தில் அவைகளின் நெசவுகள் வஸ்திரங்களுக்கேற்றவைகள் அல்ல; தங்கள் கிரியைகளாலே தங்களை மூடிக்கொள்ளமாட்டார்கள். வேறுவிதமாகச் சொன்னால், சிலந்திகள் எவ்வளவு சிக்கலாக, சிறந்ததாக தன் வலைகளைப் பின்னினாலும் தேவனிடத்திலிருந்து அது தன்னை மறைத்துக் கொள்ளமுடியாது. தேவன் அவைகள் என்ன செய்கிறது என்பதை எப்பொழுதும் அறிந்த வராகவே இருக்கிறார். இதே கருத்தைத்தான் எபிரெய ஆசிரியர் வலியுறுத்துகிறார். *அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்று மில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (4:13)* அடுத்த முறை நீங்கள் சிலந்தி பூச்சிகளைப் பார்க்கும் போது இந்த முக்கியப் பாடங்களை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் சிறுவர்களாக இருந்தாலும், தேவனுக்காக அதிகமான காரியங்களைச் செய்ய முடியும். நீங்கள் தவறான காரியம் செய்யும் போது அவரிடம் அதை மறைக்க முடியாது. ஏனெனில், அவர் எல்லவாற்றையும் பார்த்தும், அறிந்தும் இருக்கிறார். ஆகவே, இந்தச் சிறு பிராயத்திலேயே அவருடைய வசனத்தின்படி செய்வோம். இந்த கோடை விடுமுறையில் பெற்றோர்களுக்கும், மற்றவர்களுக்கும், கீழ்ப்படிந்திருங்கள். தேவ ஆசீர்வாதத்தைப் பெறுங்கள்!! அடுத்தமாதம் சந்திப்போமா!

அடுத்த மாதம் நடக்கவிருக்கும் ஏலகிரி முகாமிலே சிறுவர் களுக்கு தனியாகவும், சிறப்பாகவும் வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டி ருக்கிறது. நீங்கள் அனைவரும் வந்து பயன்பெறுங்கள் என ஊக்கப் படுத்துகிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

சகோ. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜகுமார் (93831 51616)

அன்பான திருமறை ஆசான் பத்திரிக்கை வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் ஸ்தோத்திரங்கள், வாழ்த்துக்கள். சென்ற மாதத்தில் 2-ம் சங்கீதம் பற்றி கவனித்தோம் அதில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் எப்படிப் பேசினார்கள் எப்படி சொல்லப்பட்டார்கள் என்பதைக் கவனித்தோம். அதன் தொடர்ச்சியாக சில சங்கீதங்களின் வசனங்களைக் கவனிக்கலாம், சங்கீதம் ***16:10,11***-ம் வசனங்களில் என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர். ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. இந்த சங்கீதம் தாவீதுடையது என்று முன்னுரையில் சொல்லப்பட்டுள்ளது.

இந்த சங்கீதத்தை பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் பேதுரு, பயன்படுத்தி, அப் ***2:30, 31***ல் இந்த வசனங்கள் தாவீதுக்காக எழுதப்பட்டது அல்ல, தாவீது கிறிஸ்துவுக்காக எழுதினது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். அப்படி ஆனால் கிறிஸ்துவே இந்த வார்த்தைகளைப் பேசுவதாக உள்ளது. கிறிஸ்துவானவர் இந்த வார்த்தைகளைப் பேசினார். அவர் என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் என்று இன்னொருவரிடம் சொல்லுகிறார் அதுமாத்திரமல்ல இந்த இரண்டு வசனங்களும் கிறிஸ்துவானவர் அதாவது மேசியா பிதாவாகிய தேவனை நோக்கிப் பேசுவதாக தெளிவாக உள்ளது.

மேசியாவாகிய கிறிஸ்து தனக்குத்தானே பேசிக்கொள்வதாக இல்லை ஆகவே பிதாவை நோக்கி கிறிஸ்து இந்த பூமியில் வந்து பிறப்பதற்கு சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே இந்த வசனங்களை தீர்க்கதரிசனமாகச் சொல்லி இருக்கிறார் இதை பரிசுத்த ஆவியானவரும் தீர்க்கத்தரிசியாகிய தாவீதின் மூலமாக பதிவு செய்துள்ளார். இதில் பிதா, மேசியா, பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் உள்ளனர். ஒரே நபர் இப்படி பேசி இருக்க வாய்ப்பு இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதே கண்ணோடத்தோடு சங்கீதம் 22-ல் கவனிப்போம். சங்கீதம் ***22:1***-ல் சொல்லப்பட்ட வசனம் என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? இந்த வார்த்தைகளை கிறிஸ்துவானவர் தாம் சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டு தொங்கும்போது ஒரு எழுத்து கூட பிசகாமல் சொன்னார், மத். ***27:46*** ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். இதைப் பார்க்கும் போது கிறிஸ்துவுக்காகவே இந்த வார்த்தைகள்

22-ம் சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஒருவேளை தாவீதுக்கும் கூட வாழ்கையில் இக்கட்டான சூழ்நிலைகள் வந்துள்ளது என்பது அவருடைய வாழ்க்கை சரித்திரத்தைக் கொண்டு பார்த்தால் நம்பலாம். ஆனால், அதற்குப் பின்வரும் வசனங்கள் மேசியாவாகிய கிறிஸ்துவையே அவருடைய வாழ்க்கையைப் பிரதலிக்கிறது. இதற்காக விசேஷமாக ஒரு வசனத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் சங்கீதம் 22:18 ல் இயேசுவின் உடையைப் பங்கிட்டு சீட்டுப் போட்டார்கள் தாவீதின் உடையைப் பற்றி சீட்டுப் போட்டதாக சரித்திரம் இல்லை ஆகவே இந்த 22-ம் சங்கீதத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் பாடு, மரணத்தைப் பற்றி எழுதப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை. இப்பொழுது கருத்துக்கு வருவோம் கிறிஸ்துவானவர் சிலுவையில் தொங்கும்போது சொன்ன வார்த்தை தனக்குத்தானே சொல்லிக் கொண்டது அல்ல. மேசியா, பிதாவை நோக்கி என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்கிறார். நான் ஏற்கனவே சொன்னப்படி வேதாகமம் ஒரு மனிதனால் கற்பனை செய்து எழுதப் பட்ட கதை வசனப் புத்தகம் அல்ல.

கிறிஸ்துவானவர் ஏற்கனவே அவருக்காக எழுதப்பட்ட நாடகத்தில் நடிக்க வந்த கதாபாத்திரம் அல்ல, ஒரே நபர் அப்பாவாக, மகனாக நடிக்கும் கதாபாத்திரத்தில் கிறிஸ்து நடிக்கவில்லை. அவரே சத்தியம் அவரே நீதி, பரிசுத்தம் எல்லாம். ஆகையால் அவர் மாய்மாலம் செய்ய வில்லை சிலர் சொல்வதைப் போல அவரே மேசியா வாக கிறிஸ்துவாக பூமியில் வந்து யாரும் இல்லாத பரலோகத்தை பார்த்து பிதாவே என்று சொன்னரா? அப்படி அவர் சொல்லி இருந்தால் (இது சில கள்ளப் போதகர்களின் கருத்து) அவர் பொய் சொல்லுகிறவராய் இருப்பார். வேதாகமத்தில் எங்கும் நான்தான் பிதா, குமாரனாக மாறி வந்தேன் என்று சொல்லவில்லை. கிறிஸ்து சிலுவையில் இருந்து என் தேவனே! என் தேவனே! என்று கூப்பிடும்போது: கிறிஸ்து சிலுவையில் இருந்தார் பிதா பரலோகத்தில் இருந்தார் என்பது தான் உண்மை. இந்த உண்மையைப் புரட்டும்படி இன்றைக்கு மட்டுமல்ல அநேக நூற்றாண்டுகளாக சத்தியத்தை மாற்றி திரித்துவம் என்கிற வேதத்தில் இல்லாத ஒரு வார்த்தையைச் சொல்லி அதைப் பிரபலப்படுத்தி, அதை மக்களை நம்ப வைத்து அநேகரை இன்றைக்கும் முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையை விட பொய்தான் மக்களிடத்தில் விரைவில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. உண்மையை விட பொய் தான் விரைவாகப் பிரபலம் அடைகிறது. ஆனால், முடிவில் உண்மை அதாவது சத்தியம் தான் வெற்றிப்பெறும் இதே 22ம் சங்கீதத்தில் 22ம் வசனம் உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன் என்ப தாகும். இந்த வசனத்தை பரிசுத்த ஆவியானவர் எபிரெயருக்கு எழுதும் போது அந்த நிருபத்தில் கிறிஸ்துவுக்காக பயன்படுத்துகிறார். எபிரெயர் 2:12 ல் உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபை நடுவில் உம்மைத் துதித்து பாடுவேன் என்றும், என்று மேற்கோள் காட்டி யிருக்கிறார். இந்த வசனத்தில் விளக்கம் என்னவென்றால் மேசியாவாகிய

கிறிஸ்து பிதாவின் நாமத்தை சகோதரர்களுக்கு அறிவித்து சபை நடுவில் கிறிஸ்து பிதாவை துதித்துப் பாடுவர் என்பது ஆகும். இங்கேயும் இரண்டு நபர்கள் உள்ளனர். ஒருவர் (கிறிஸ்து) இன்னொரு வருடைய நாமத்தை (பிதா என்னும் நாமத்தை) சகோதரர்களுக்கு அறிவிப்பார். அவர் (கிறிஸ்து) சபைநடுவில் இன்னொருவரை (பிதாவை) துதித்துப் பாடுவர் என்று தெளிவாக வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. மற்றவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் கிறிஸ்து அவருடைய நாமத்தை அவரே சகோதரருக்கு அறிவித்து அவருடைய பெயரை அவரே குறித்துப் பாடுவதாகவா உள்ளது இல்லையே. கிறிஸ்துவானவர் பிதா வினுடைய (உம்முடைய) நாமத்தை அறிவித்து, பிதாவினுடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார் என்று தான் வசனம் எழுதப்பட்டுள்ளது. இதன்படி இந்த வசனத்தில் பேச்சாளரும் அவர் யாரைப்பற்றி சொல்லு கிறாரோ இந்த இருவரும் ஒரே நபர் அல்ல என்பது தெளிவாகிறது. இப்படி மேசியாவாகிய கிறிஸ்துவானர் இந்த பூமியில் மனிதனாக பிறந்து வந்த போது பிதாவை வெளிப்படுத்தினார். இதை அப்போஸ்தல னாகிய யோவான் தான் சுவிசேஷ புஸ்தகத்தில் யோவான் 1:18-ல் தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியி லிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார், என்கிறார். இயேசு கிறிஸ்துவானவர் நான் தான் பிதா என்னை நானே வெளிப் படுத்துகிறேன் என்று சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, அநேக இடங்களில் பிதா என்னை அனுப்பினார் என்று திட்டமாய்ப் பேசுகிறார், என்னை அனுப்பின பிதா என்றும் பேசுகிறார். யோவான் 5:36, 37, 38. அன்பானவர்களே, நாம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசியாவிட்டால் நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இல்லை. அதே நேரத்தில் கிறிஸ்துவும் தேவனாய் இருக்கிறார். நித்திய பிதா என்றும் சொல்லப்பட்டுள்ளர், இதைப் பற்றி வருகிற நாட்களில் விவரிப்பேன் என்றும் சொல்லி யிருக்கிறேன். தேவன் தாமே உங்களை ஆசிர்வதிப்பாரக! ❀

- தொடரும்...

## நாளும் நடப்பும்

- ஆந்திராவில் 20 தமிழகத் தொழிலாளர்கள் சுட்டுக் கொலை.
- உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியக்கவேண்டும் – தமிழக முதல்வர்
- பாகிஸ்தான் தேவாலயத் தாக்குதல் 15 பேர் பலி, 80 பேர் காயம்.
- ஆசிரியர் தகுதித்தேர்வு எழுதுவோருக்கு இலவசப் பயிற்சி – பள்ளிக் கல்வித்துறை.
- தமிழகம் முழுவதும் வாக்காளர்பட்டியல் திருத்தும் முகாம் நடைபெறுகிறது.
- IPL சீசன் 8 போட்டிகள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன.

# பரீட்சை

**Bro. K. பாண்டியன்**

திருமறை ஆசான் வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முதல் இந்த மாதம் வரை படிக்கும் மாணவர்கள் பரீட்சை ஜுரத்தில் இருப்பதை நாம் அறிவோம். பொதுவாக பரீட்சை நன்றாக படிப்பவர்களுக்கு ஒரு சுவாரசியமான சவலாக அமையும். பக்திக்குரிய வாழ்க்கையில் விசுவாசிகளும் பரீட்சையை சந்திக்கிறோம் என்று வேதம் சொல்கிறது. ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இந்தப் பரீட்சை அவசியமாகிறது என்பதை தேவவசனம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. பொதுவாக நான்கு வகையான பரீட்சை பற்றி அப்-உபதேசம் நமக்கு அறிவிக்கிறது.

**முதலாவது மனுஷன் கடவுளை பரீட்சை பார்ப்பது:**

1கொரி.10-ம் அதிகாரத்தில் பவுல் அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சை பாராதிருப்போமாக என்கிறார். அதற்கு திருஷ்டாந்தமாக எண்.21:4-6 பகுதியில் இஸ்ரயேல் ஜனம் தங்கள் பிரயாணத்தில் சோர்ந்து மோசேக்கு விரோதமாக பேசி சுவையான உணவு இல்லை என்று வெறுப்பாகப் பேசினார்கள் அந்தப் பேச்சுதான் அவர்கள் கிறிஸ்துவை பரீட்சை பார்த்தார்கள் என்று அப்-உபதேசம் பதிவு செய்கிறது.

எனக்கன்பானவர்களே, தேவன் அவர்களுக்காகப் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை ஆயத்தப்படுத்தி அழைத்து செல்லும் போது இடையில் மனுஷர் கவனம் சிறிய காரியங்களில் ஈடுபட்டு கொள்ளி வாய்ச் சர்ப்பங்களினால் அநேகர் செத்தார்கள். இன்றைக்கும் பரலோக வாழ்க்கை நமக்கு வாக்களிக்கப்பட்டு அதற்கான பிரயாணமாக சபை வாழ்க்கையில் தொடருகிறோம். அதிலும் சிலர் ஊழியர்களுக்கு விரோதமாகப் பேசி, சபை கூடுதலை விட்டு விடுதல் என்பது அவர்கள் ஆவிக்குரிய மரணத்தை அடைகிறார்கள் என்பதைக் காண்பிக்கிறது. ஊழியர்களுக்குக் கீழ்படிவது என்பது சிலருக்கு ஏதோ கெட்ட வார்த்தையைப் போல பார்க்கிறார்கள். ஆனால், தேவ சித்தப்படி அந்தக் கீழ்படிதல் தனி நபரின் விசுவாச வளர்ச்சிக்கு மிகவும் அவசியம் என்று அப். உபதேசம் போதிக்கின்றது (எபி. 13:7,17). இஸ்ரயேல் ஜனங்கள் பிரயாணத்தின் ஆரம்பத்திலேயே தண்ணீர் கிடைக்க தாமதமான போது அவர்கள் தேவனுக்கு விரோதமாக வாதாடி அவரைப் பரீட்சை பார்த்தார்கள் (யாத். 17:7). நாமும் நமக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் உடனடியாகக் கிடைக்காத போது அவிசுவாச வார்த்தை களைப் பேசி புலம்புகிறோம். இனி இதை உணர்ந்து தேவனுக்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் ஞானத்தை பெற தேவனிடம் வேண்டிக் கொள்வோமாக.

**இரண்டாவதாக தேவன் மனுஷருக்கு வைக்கும் பரீட்சை :**

ஆபிரகாமின் விசுவாசத்தை உலகம் பின்பற்ற வேண்டும் என்பதற்காக அவனுடைய மகனைப் பலியிடும் படியான சோதனை வந்தது. யோபின் பொறுமையை நாம் பின்பற்றும்படியாக அவனுக்கு உறவுகள் மற்றும் உடைமைகள் இழப்பு உண்டானது. இதை யாக்கோபு 5ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் அவர்கள் திருஷ்டாந்தமாய் இருக்கிறார்கள் என்கிறது. ஆனால், நாம் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். தேவன் ஒருவரையும் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல (யாக். 1:13).

சில காரியங்கள் நம் வாழ்க்கையில் நடக்கும்போது நாமும் மன அழுத்தத்திற்கு உள்ளாகி தவறாக தேவனைப் பற்றி யோசிக்குமளவு தள்ளப்படுகிறோம். ஆனால் வேதம் நமக்கு நிறைய ஆறுதலையும், ஆலோசனைகளையும் வைத்திருக்கிறது. எரிகோ மதில் அகன்று போக தேவன் ஜனங்களை வெறுமனே சுற்றிவரச் சொன்னார். ஒரு வேளை அதைச் சுற்றிவரும்போது அது வீண்வேலையாகத் தோன்றியிருக்கலாம். எலிசா நாகமானை யோர்தான் நதியில் ஏழுதரம் முழுகி எழுந்திருக்கச் சொன்னபோது அவன் அப்படித்தான் நினைத்தான். ஆனால், நன்மையான முடிவை நாம் அறிவோம். நம் வாழ்க்கையிலும் சில காரியங்கள் நம் அறிவுக்கு புரியாவிட்டாலும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பது உறுதி (ரோமர் 8:28) விசுவாசமாக நாம் இருக்கும் போது தான் பரீட்சையை சந்திக்கிறோம். படிக்காத பிள்ளை களுக்குத் தேர்வு இல்லை. அதைப் போல உலக மக்களைப் பார்த்து நாம் பொறாமைப்படத் தேவையில்லை. நம்முடைய பரீட்சை நமக்கு பொறுமை என்னும் விலையேறப்பெற்ற குணத்தைப் பெற்றுக் கொள்ள உதவுகிறது. எனவே பரீட்சையில் சந்தோஷப்படு, சோதனையை சகிக்கும் போது தேவனிடம் தேர்ச்சி பெற்ற பட்டத்தைப் பெறுவோம் (யாக். 1:3,12) எபி. 11:37-ல் நம் விசுவாசத்திற்கு முன்னோடிகள் அநேக உபத்திரவங்களையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள் என்று சொல்லி அதைத் தொடர்ந்து நம்மைப் பார்த்து ஒரு கருத்து முன் வைக்கப்படு கிறது: பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தம் சிந்துமளவு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லை என்பது எபி. 12:4. ஒவ்வொருவரும் பரிசுத்த வாழ்க்கைக்குத் தங்களை எந்த அளவு ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**மூன்றாவதாக சாத்தானால் உண்டாகும் சோதனைகள் :**

தேவனுக்கும் நமக்கும் விரோதியானவன் தான் இந்த உலகத்தின் அதிபதி என்றும், குற்றஞ்சாட்டுகிறவன், மோசம் போக்குகிறவன் மற்றும் சோதனைக்காரன் என்றும் அழைக்கப்படுகிற சாத்தான். முதல் மனிதனை வஞ்சித்து இன்னும் தொடருகிறான் 2 கொரி. 11:3. நம்மை இந்த உலகத்தில் பண ஆசைக்கு அடிமைப்படுத்தி பெருமை அடையச் செய்து தந்திரமாக விழவைக்கும் பரீட்சையை இவன் நடத்துகிறான். எனவே தான் சிலர் எவ்வளவு குடித்தாலும் ஸ்டெடியாக இருப்பேன், பெண் சிநேகிதங்கள் எனக்கு தான் அதிகம் என்றும், குறுக்கு வழியில் அதிக பணம் சம்பாதிப்பேன் என்றும் பெருமைபேசி, பறவை வேடன் வலையில் விழுவதுபோல சாத்தானின் பரீட்சையில் விழுந்து

போகிறார்கள் 1 நாளா 21:1-ல் தாவீதைப் பெருமைப்படவைத்தது, இயேசு ஆண்டவரை பக்தியிலிருந்து கெடுக்க சோதித்தது, சபையில் தந்திரமாக பிரிவினைகளை உண்டாக்குவது (2 கொரி. 2:11) கணவன் மனைவி பிரிந்திருக்க உற்சாகப்படுத்துவது 1 கொரி. போன்ற அநேக தந்திரங்களினால் சாத்தான் மனுஷரை சோதித்துக் கொண்டுதான் இருக்கிறான். அதை ஜெயிக்க விசுவாசமே அவசியமாகிறது. (1 தெச. 3:5; 1 யோவான் 5:4).

**கடைசியாக நமக்கு நாமே வைத்துக் கொள்ளும் பரீட்சை:**

2 கொரி 13:5. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ. என்று நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். அதற்குப் பரீட்சைக்கு நிற்க வேண்டும். சில படிக்காத மாணவர்கள் வருடமுழுவதும் பள்ளிக்கு வந்தும் பரீட்சை எழுதாமல் ஆப்சென்ட் ஆகிவிடுவார்கள். அதுபோல அல்லாமல் நாம் சபைக்கூடுதலிலும், சகோதர ஐக்கியத்திலும், ஊழியர்களை கனம் பண்ணும் விஷயத்திலும் பரீட்சையில் நின்று அந்த சூழ்நிலைகளில் தேர்ச்சியடைய வேண்டும். 2 தீமோ 3:8 மோசேக்கு எதிர்த்து நின்ற யந்நே, யம்பிரே - துர்புத்தியுள்ள மனுஷர் என்றும் விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள் என்றும் அப் - உபதேசம் குறிப்பிட்டுக் காண்பிக்கிறது. நிறைய நேரத்தில் தம்மை பரீட்சித்துப் பார்த்துக் கொள்வதற்கு பதில் நாம் மற்றவர்களுடைய விசுவாசத்தை பரீட்சித்துப் பார்க்க ஆவலாயிருக்கிறோம். ஆனால் அது சாத்தானின் வேலை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சபை கூடிவருவது மற்றவர் களை அல்ல, தன்னைத்தான் சோதித்து அறியவே என்பது முக்கியம். 1 கொரி 11:28. இதை நாம் வாரந்தோறும் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறோம், செயல்படுத்துவோம்.

## தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குதத்தங்கள்

**நாம் போதிக்கப்படும் போது.....**

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரித்தியர்.10:13).

**நாம் பயப்படும் போது....**

நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன், நான் உன் தேவன் ; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்.

**நமக்கு ஞானம் தேவைப்படும்போது....**

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன் (யாக்கோபு. 1:5).

**மரணத்தைக்கண்டு நாம் பயப்படும்போது....**

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக் கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவ னெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் (யோவான் 11:25,26)

# துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!

Bro. வேத் லீ வெப்ஸ்டர்

கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; நான் வெட்கப் பட்டுப் போகாதபடி செய்யும்; துன்மார்க்கர் வெக்கப்பட்டு பாதாளத்தில் மௌனமாயிருக்கட்டும் (*சங். 31:17*).

துன்மார்க்கர் பாவஞ்செய்கையில், பல வேலைகளில், வெட்கப் படுவதே இல்லை. எரோமியா தீர்க்கதரிசியின் நாட்களில் வசித்த மக்களைப்பற்றி அவர் கூறுகையில் அவர்கள் அருவருப்பானதைச் செய்த தினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிசேதம் வெட்கப் படார்கள், நாணவும் அறியார்கள் (ஏரே. *6:15*) என்கிறார். சில துன்மார்க்கர்களைப் பற்றி ஒரு படி மேலே சென்று அவர் கூறுகிறார்; நீயோ நாணமாட்டேன் என்கிறாய். (ஏரே. *3:3*). பாவம் சம்பந்தப்பட்ட காரியத்தில் மேலே குறிப்பிட்டவர்களின் நிலை உங்களுக்குப் பரிச்சயப்பட்டதாகத் தோன்று கிறதா? ஆம் என்றே சொல்லுவீர்கள். ஏனெனில், இன்று தேவனுக்கும் அவருடைய வசனத்துக்கும் விரோதமாகக் கலகஞ்செய்யும் துர்மார்க்கர் நாணப்படுவதே இல்லை. தங்களுடைய பாவங்களுக்காக வெட்கப் படுவதற்கு மாறாக, பாவப்படுகுழியில் விழாமல் இருக்கும் நீதிமான்களை வெட்கப்பட வைக்க முயலுகின்றனர். இதே ஆயுதத்தைத் தான் இன்றைய இளைஞர்களுக்கு விரோதமாகவும் துன்மார்க்கர் பயன் படுத்துகின்றனர்.

### கீழ்க்கண்ட உதாரணங்களைப் பாருங்கள்:

இன்றைய உலகில் சர்வசாதாரணமாகிப் போன தவறான பாலியல் உறவுகிளில் ஈடுபடாத காரணத்திற்காக வாலிபர்களை வெட்கப்பட வைக்கின்றனர். தங்களுடைய கற்பைக் காத்துக் கொள்ள பரிசுத்தமான வாலிபர்களை நாணவேண்டியவர்களாக கருதுகிறது இன்றைய துன்மார்க்க உலகம். என்ற போதிலும், கிறிஸ்தவ வாலிபர்கள் இத்தகைய பரிசுத்த வாழ்க்கைக்காக நாணமடையத்தேவையில்லை. வேசித்தனத்திற்கு விலகியோடி (*1 கொரி. 6:18*) பாலியத்திற்குறிய இச்சைகளுக்கும் விலகியோடி (*2 தீமோ. 2:22*). உன்னை சுத்தவனாக காத்துக்கொள் (*1 தீமோ. 5:22*) என பரிசுத்த ஆவியானவரால் ஏவப் பட்டு பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்.தேவனுடைய மேற்கண்ட கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது வாலிபர்கள் வெட்கப்படக் கூடாது. ஆனால், மாறாக *துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!*

இன்றைய நடைமுறையில் பழக்கமாகி விட்ட பருவக்குறும்பு களுக்கு விலகிநிற்கிற வாலிபர்களை கட்டுப் பெட்டிகள் எனப் பட்டம் சூட்டி வெட்கப்படச் செய்கின்றனர். மதுபானம் அருந்தாதவன், பீடி, சிகரெட் பிடிக்காதவன், சீட்டாடத்தெரியாதவன் எல்லாம் வாலிப

சமுதாயத்துக்கே லாயக்கற்றவன் என்று பண்புள்ள இளைஞர்களை மட்டந்தட்டி அவர்களுடைய ஆண்மையை குறித்து வினா எழுப்பு கின்றனர். துன்மார்க்கர் என்றாலும் கிறிஸ்தவ வாலிபர்கள் இதற்காக வெட்கப்பட வேண்டியதில்லை. ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலக வேண்டுமென பேதுரு கூறுகிறார். (1 பேதுரு 2:11). மது, போதைப் பொருட்கள் இவற்றால் நமது சரீரத்தை கெடுத்துக்கொள்ள நமக்கு அதிகாரமில்லை. ஏனென்றால், நமது சரீரமானது கிறிஸ்துவின் விலையேற்றப்பெற்ற இரத்தத்தால் கிரை யத்துக்கு வாங்கப்பட்டுள்ளது. தேவன மகிமைப்படுத்தவே அதை உபயோகிக்க வேண்டும். (1 கொரி. 6:19,20) மதுமயக்கம் பரலோகத்தில் நமக்குரிய இடத்தைப் பறித்துப்போடும் (கலா. 5:21) என பவுல் கூறுகிறார். ஆகவே, தேவனுடைய ஞானமான ஆலோசனை தரும் வசனங்களைப் பின்பற்றும் வாலிபர்கள் வெட்கப்பட ஒன்றுமேயில்லை. மீண்டுமாக துன்மார்க்கரே வெட்கப்படட்டும்!

இன்றைய நவநாகரீக அலங்கோல அரைகுறை ஆடைகளை அணியாத வாலிபர்களை பத்தாம் பசலி எனக்கூறி தங்கள் கூட்டாளி களாகச் சேர்த்துக்கொள்ளாமல் ஒதுக்கி வைத்து வெட்கப்பட செய்ய முயலுகின்றனர். நமது கிறிஸ்தவ வாலிபர்கள் ஒழுக்கமாக ஒழுங்கான ஆடைகளை அணிவது வெட்கப்பட வேண்டிய காரியமாக இன்று கருதப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ இளைய சமுதாயம் இதற்காக நாணமுறத் தேவையில்லை, நீங்களோ உங்களை அந்தரகாத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதி யாயும் அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1 பேதுரு 2:9) என பேதுரு நம்மைப் பார்த்து கூறுகிறார். நமது ஆடைகளிலும் நமது வாழ்வின் இதர காரியங்களிலும் உலகிலிருந்து மாறுபட்டவர்களாக நாம் இருக்கவேண்டும். அடக்கமான வாழ்வைக் கடைபிடிக்கும் கிறிஸ்தவ வாலிபர்கள் அதற்காக வெட்கப்பட வேண்டிய அவசியமே இல்லை. துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!

வாலிபனான தீமோத்தேயுவை நோக்கி, உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தை யிலும், நடக்கையிலும், அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. (1 தீமோ. 4:12) தீமோத்தேயுவைப் போன்ற வாலிபர்கள் வெட்கப்படக்கூடாது. தேவனுக்கு விசுவாசமான வர்கள், அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத் திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிற மக்களாக இருக்கிறார்கள். (1பேதுரு 2:9)

தாவீது கூறியது போல, என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன் நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும். என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழ விடாதேயும் உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும் முகாந்திரமில்லாமல் துரோகம் பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப்போவார்களாக (சங். 25;1,3).



## வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்ய அழைக்கப்படும் இரண்டு குமாரர்.

**சகோ. கே. பாஸ்கர்**

அன்பு உள்ளம் கொண்ட வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துகள், இதன் தொடர் பாடத்தில் இம்மாதத்தில் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையில் அதாவது திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்ய அழைக்கப்படும் இரண்டு குமாரர் பற்றிய உவமையை அறிந்து கொள்வோம்.

**இரண்டு குமாரர் உவமை (மத்தேயு 21:28—31)**

ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் மூத்தவனிடத்தில் அவன் வந்து மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய் என்றான். அதற்கு அவன் மாட்டேன் என்றான் ஆகிலும் பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்தில் அவன் வந்து அப்படியே சொன்னான். அதற்கு அவன் போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று ஆண்டவர் இயேசு யூதர்களைப் பார்த்துக் கேட்டார். (மத். *21:28-31*) இந்த உவமையின் மூலமாக வார்த்தையைக் காட்டிலும் செயல்களே மேலானவை என்றும், சொல்லியும் செய்யாதவனை விட சொல்லாமல் செய்பவனே மேலானவன் என்பதையும் ஆண்டவர் விளக்குகிறார். நாம் இந்த உவமையின் மூலமாக சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறேன் என்று சொல்வதைக் காட்டிலும் செயலில் காண்பிப்பதே சிறந்தது என்று அறிந்து கொள்வோமாக மூத்த குமாரன் மனந்திரும்புகிறவர்களைக் காட்டுகிறது. இளைய குமாரன் மனந்திரும்பாத யூதர்களைக் காட்டுகிறது.(இன்று நாமகரணக் கூட்டத்தார்)

**தேவனுடைய ராஜ்யம்**

இந்த உவமையின் மூலமாக இயேசு மனந்திரும்பாதவர்களைப் பார்த்து உங்களுக்கு முன்னே ஆயக்காரரும், பாவிகளும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்றார். தேவனுடைய ராஜ்யம் என்பது கிறிஸ்துவின் ராஜ்யம் (எபே. *5:5*) கிறிஸ்துவின் ராஜ்யம் என்பது அன்பின் குமாரனுடைய ராஜ்யம் (கொலோ. *1:13*) அது கிறிஸ்துவின் சபையாகும் (ரோமர் *16:16*) கிறிஸ்துவின் சபையிலே அநேகர் பிரவேசிக்கிறார்கள் ஆனால் நம்மில் சிலர் வீண் ஜம்பம் பார்த்துக் கொண்டு எல்லாம் அறிந்திருந்தும் தங்கள் பாரம்பரிய சபைகளை விடாமல் பிடித்திருக்கின்றனர். ஆனால் ஆண்டவர் சொன்னார் இப்படிப்பட்டவர்கள் யாவரும் மனந்திரும்ப அவசியமில்லாதவர்கள்! சொல்லியும் செய்யாத இளைய குமாரனுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்! இவர்கள் யாவரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். (2.பேதுரு*3:9*) அப்படி மனந்திரும்பினால் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம்

உண்டாயிருக்கும். (லூக்15:7) இதை விட வேறு ஒரு காரியம் பரலோகத்தை சந்தோஷப்படுத்த இல்லை.

**அழைப்பு**

இந்த உவமையில் வரும் தகப்பன் தனது இரண்டுகுமாரர்களையும் ஒரு குறிப்பிட்ட வேலைக்கு அழைக்கிறார். அவர்களை வேலை வாங்க தனக்கு உரிமை உண்டு என்ற எண்ணத்தில் மகனே இன்றைக்கு என் திராட்சைத் தோட்டத்தில் வேலைசெய் என்று சொல்கிறான். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற உரிமை உண்டு. இன்றைக்கு கிறிஸ்துவின் சபையாகும். அந்த சபையில் நாம் வேலை செயல் வேண்டும். அது தூங்கும் இடமல்ல அது சுறு சுறுப்பாக செய்யபடும் இடம், ஒரு முதலாளிக்கு ஒரு தொழிலாளி குறைந்தது எட்டு மணி நேரம் வேலை செய்வது வழக்கம். அதுபோல பரலோக எஜமானன் தேவனுக்கு கணக்குப் பார்க்காமல் குறைந்தது எட்டு மணி நேரமாவது சுவிசேஷ வேலையைச் செய்ய வேண்டும். நமக்குப் பல வேலைகள் இருந்தாலும் நாம் தேவனால் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். அந்தக் குறிப்பிட்ட வேலை நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15) என்பதே. இந்த வேலையில் அசதியாயிராமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அசதியாக இருப்போமேயாகில் நமக்கு ஐயோ! (1. கொரி. 9:16) அவருடைய சபைக்குள் நுழைகிற ஒவ்வொருவரும் அவருடைய சித்தத்தைச் செய்யவேண்டும் (1 தீமோ. 2:4) அவர் தமது சித்தம் செய்ய அழைக்கிறார். (2 தெச. 2:14)

**இரு குமாரர்களில் நீவிர் யார்?**


இந்த உவமையில் சொல்லும், செயலும் அதி முக்கியமானதாகக் காட்டுகிறது. நம் வாழ்க்கையில் சொல் ஒன்று செயல் இன்னொன்றாக இருக்கக் கூடாது. யாக்கோபு ஆசிரியர் கூறுகின்றார். அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக். 1:22) என்று. நாம் வாய்ச் சொல்லில் வீரர்களாக இருக்கக் கூடாது. இன்றே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். இந்த உவமையில் வரும் தகப்பன் இன்று வேலை செய்யச் சொன்னார் . நாம் இன்றே இரட்சணிய நாள் என்பதை மறக்காமல் இருக்க வேண்டும். (2 கொரி. 6:2) நாளை வேலை செய்து கொள்ளலாம் என்று இளைய குமாரன் நினைத்திருக்கலாம். நாளை என்பது இல்லை அது வெரும கனவு (யாக். 4:14) இதை உணர்ந்த மூத்த குமாரன் மனஸ்தாபப்பட்டுப் போனது போல நாமும் உணர்ந்து இன்றே கீழ்ப்படிவோம். தேவ சித்தம் செய்வோம்.


**ஒரு பிரசங்கியாருக்கு தேவையானவைகள்**


- ❋ எருதைப் போல் பலம்.
- ❋ ஒட்டகத்தைப் போல் சகிப்புத்தன்மை.
- ❋ சிங்கத்தைப் போல் துணிச்சல்.
- ❋ கழுகைப் போல் பார்வை.
- ❋ புறாவைப் போல் கபடற்ற தன்மை.
- ❋ ஆந்தையைப் போல் ஞானம்.
- ❋ ஆட்டுக்குட்டியைப் போல் மென்மை.


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.



















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
**Monday 7:00 - 7:15 am**
**Thursday 9:30 - 10:00 pm**
**Saturday 7:15 - 7:30 am**



Arjunan In Tamil
**TV : Every Monday 6:00 - 6:15 am and**
**Every Saturday 6:15 - 6:30pm on Tamilan TV**
**Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio**

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
**Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on**
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
**Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV**

Philemon & Kingsley in Tamil:
**Tamilan Tv : Sunday 6:45 - 7:00 pm**
**Friday 6:00 - 6:30 am**



P.R. Swamy & Douglas:
**Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm**
**on 25 And 49 Meter bend of Sri Lankan Radio**

Joshua & Ricky Gootam In Telugu:
**Every Saturday at 6:00 pm Subhavartha Channel**
**Every Wednesday at 6:30 pm on Rakshana Channel**
**Every Thursday at 11:00 am on Rakshana Channel**
**Satyavani T.V. online : www.sakthitv.in**
**Every Wednesday & Friday at 8.00 pm**

Thang Lien in Manipur:
**Hornbill Cable, Channel No.1**
**6:00 - 7:00 pm, Sunday, Tuesday, Thursday, Saturday.**


For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
**@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,**
**Arasaradi, Madurai - 625016**
**9244204420 / 21, 0452 - 2607026**


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


## எங்களது இதர வெளியீடுகள்


சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்


தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.













# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor: S. Rajanayagam.